**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 66** **நாள்: 08.05.2019**

**11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 93.52 சதவீதம் தேர்ச்சி மற்றும் 1 பள்ளி 100 சதவீதம் தேர்ச்சியும் பெற்றுள்ளன என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளின் வாயிலாக 2018–19ம் கல்வியாண்டில் பயின்று, மார்ச் 2019ல் 11ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1,743 மாணவர்கள், 3,090 மாணவியர்கள் என மொத்தம் 4,833 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதி இருந்தனர். இவர்களில் 1,565 மாணவர்கள், 2,955 மாணவியர்கள் என மொத்தம் 4,520 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். சென்னைப் பள்ளிகளில் 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மொத்த தேர்ச்சி சதவீதம் 93.52 ஆகும். இவற்றில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 89.79, மாணவியர்களின் தேர்ச்சி சதவீதம் 95.63 ஆகும்.

**2018–19ஆம் கல்வி ஆண்டில்..**

| | |
|---|---|
| 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகள் | .. 1 |
| 100/100 மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகள் | .. 1 |
| ஐநூற்றுக்கு மேல் (Above 500 ) மதிப்பெண் பெற்றவர்கள் | .. 14 |
| நானூற்று ஐம்பதுக்கு மேல் (Above 450) மதிப்பெண் பெற்றவர்கள் | .. 74 |

**100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகளின் விவரம்**

1. சென்னை மேல்நிலைப்பள்ளி, நெசப்பாக்கம்

2018–19ம் கல்வியாண்டில் 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மற்றும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளி தலைமையாசிரியர் அவர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**